# திருநெல்வேலி மாநகராட்சி

## 29.07.2022 அன்று நடைபெற்ற சாதாரணக் கூட்ட பொருட்கள் மற்றும் தீர்மானங்கள் விவரம்

---

**1.** திருநெல்வேலி மாநகராட்சி, பாளையங்கோட்டை வார்டு எண் 37 தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் ஸ்டேஜ் 1ல் உள்ள சிறுவர் விளையாட்டு பூங்காவில் 15th Finance commission – NUHM (Urban Health and Wellness centres) திட்டத்தின் கீழ் சுகாதார மற்றும் ஆரோக்கிய மைய கட்டிடங்கள் வார்டு எண் 37 ( பழைய வார்டு எண் 17) வி. எம். சத்திரம் பூங்கா நிலை 1ல் கட்டுவதற்கு மாமன்றம் தீர்மான எண் 171/24.1.2022-ன் படி அனுமதி வழங்கப்பட்டு ஒப்பந்தக்காரர்க்கு வேலை ஆணை வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மேற்கண்ட தேர்வு செய்யயப்பட்ட இடத்தில் சிறுவர் விளையாட்டு பூங்காவகவும், அந்த புங்காவினுள் ஏற்கனவே பழுதடைந்தநிலையில் உள்ள மோட்டார் அறையினை இடித்து அப்புறப்படுத்திவிட்டு புதியதாக சுகாதார மற்றும் ஆரோக்கிய மைய கட்டிடம் கட்ட வேண்டியுள்ளது. மேற்கண்ட பழுதடைந்த கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்த உத்தேச மதிப்பீடு செலவினம் ரூ. 90,000/- ஆகும். மேற்கண்ட செலவினம் ரூ. 90,000/- க்கு நிர்வாக அனுமதியும் , ஆபத்தான நிலையில் உள்ள மோட்டார் அறையின் கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்திடவும் மாமன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு**

மேற்கண்ட வார்டு 37 ( பழைய வார்டு 17) வி. எம். சத்திரம் பூங்கா நிலை -1ல் மிகவும் பழுதடைந்த பொதுமக்களுக்கு ஆபத்தான நிலையில் உள்ள மோட்டார் அறையினை இடித்து அப்புறப்படுத்திவிட்டு அவ்விட்டத்தில் 15th Finance Commission –NUHM ( Urban Health and Wellness Centres) திட்டத்தில் சுகாதார மற்றும் ஆரோக்கிய மைய கட்டிடம் கட்டுவதற்காக பூங்கா பகுதியில் மிகவும் பழுதடைந்து பொதுமக்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் நிலையில் உள்ள மோட்டார் அறையினை அப்புறப்படுத்திடவும் அதற்காகும் செலவினத் தொகை ரூ. 90,000/-க்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ம. எண். 72/2022-23 மைய அலுவலகம்)**

### தீர்மானம் எண்: 51 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

---

**2.** திருநெல்வேலி மாநகராட்சி, தச்சநல்லூர் மண்டல அலுவலகம் 2022-2025-ம் ஆண்டிற்கு ஒப்படைக்கப்படும் நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு உரிம இனங்களுக்கு 17.03.2022 அன்று நடைபெற்ற பொதுஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் தச்சநல்லூர் மண்டல அலுவலகத்திற்குட்பட்ட மதுரை ரோடு வேன் ஸ்டாண்டில், அங்கு நிறுத்தப்படும் வேன்களுக்கு

மாநகராட்சியால் நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு கீழ்க்கண்ட விபரப்படி 2.3.2022 அன்று உள்ளூர் தினசரி நாளிதழில் விளம்பரப்படுத்தப்பட்டது.

**குத்தகை இனங்கள்**

| வ.எண் | உரிம இனம் | (குறுமத் தொகை) | வைப்புத் தொகை | கூடுதல் வைப்புத் தொகை |
|---|---|---|---|---|
| 1 | தச்சநல்லூர் மண்டலத்திற்குட்பட்ட மதுரை ரோடு வேன் ஸ்டாண்டில் நிறுத்தப்படும் வேன்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 1,60,000/- | 40,000/- | 40,000/- |

மேற்படி பொது ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. ஒப்பந்தப்புள்ளியில் இருவர் மட்டும் கலந்து கொண்டு அதில் திரு. எஸ்.முத்துகிருஷ்ணன் என்பவர் ஒப்பந்தப்புள்ளி தொகை 1,62,000/- கேட்டுள்ளார். இந்த ஒப்பந்தப்புள்ளி தொகையானது குறுமத்தொகையைவிட ரூ. 2000/- கூடுதலாக உள்ளது. மேற்படி விபரங்களை ஆணையாளர் அவர்களுக்கு சமர்ப்பிக்கும் பட்சத்தில் ஆணையாளர் அவர்களின் 11.4.2022ம் தேதிய உத்திரவில் 2 மாதங்களுக்கு திரு.எஸ்.முத்துகிருஷ்ணன் என்பவருக்கு கால நீட்டிப்பு செய்து வழங்கிட ஆணையிடப்பட்டு திரு.எஸ்.முத்துகிருஷ்ணன் (1.4.2022 முதல் 31.5.2022) முடிய நீட்டிப்பு செய்து ஆணை வழங்கப்பட்டது. அதனை தொடர்ந்து ஆணையர் அவர்களின் 25.04.2022ம் தேதிய உத்திரவில் மேற்படி இனத்திற்கான குறுமத்தொகையினை ரூ.3,00,000/- என நிர்ணயம் செய்து புதிய ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோர ஆணையிடப்பட்டது.

அதற்கிணங்க 26.4.2022 அன்று உள்ளூர் தினசரி நாளிதழில் மறுஏலம்/ ஒப்பந்தப்புள்ளி விபரங்கள் விளம்பரப்படுத்தப்பட்டு 17.5.2022ல் நடைபெற்ற பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் ஒருவரும் இவ்வினத்திற்கு ஏலம் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளவில்லை.

எனவே ஆணையாளர் அவர்களின் 24.5.2022ம் தேதிய ஆணையின்படி திரு.எஸ்.முத்துக்கிருஷ்ணன் என்பவருக்கு மேலும் 2 மாதங்களுக்கு 1.6.2022 முதல் 31.7.2022 வரை உரிம கால நீட்டிப்பு செய்து அதற்கான உரிமத்தொகை செலுத்த இவ்வலுவலகம் இதே எண்ணிட்ட அறிவிப்பு நாள்: 24.05.2022 இன்படி தெரிவிக்கப்பட்டு ரூ.32465/- ஐ மாநகராட்சி கருவூலத்தில் 30.05.2022இல் செலுத்தியுள்ளார்.

இந்நிலையில் மேற்படி இனத்திற்கு 15.6.2022 மற்றும் 30.6.2022ல் மறுஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டும் ஒருவரும் மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளவில்லை.

இந்நிலையில் மேற்படி உரிமஇனத்திற்கு ஆணையர் அவர்களின் 22.4.2022ஆம் தேதிய உத்திரவின்படி குறுமத்தொகை ரூ.3.00 இலட்சம் என நிர்ணயித்து 3 முறை ஏலம் ஒப்பந்தப்புள்ளி கோரியும் ஒருவரும் கலந்து கொள்ள முன்வரவில்லை. எனவே மாநகராட்சி வருவாய் இழப்பினை தவிர்க்கும் நோக்கில் மேற்படி உரிம இனத்தை திரு.எஸ். முத்துகிருஷ்ணன் என்பவர் 17.03.2022ல் ஒப்பந்தபுள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள உயர்ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ 1,62,000/- ஐ ஏற்று ஒப்படைப்பு செய்யவும் மாநகராட்சி

ஆணையர் அவர்களின் ஆணையின்படி 01.04.2022 முதல் 31.07.2022 முடிய 4 மாத கால நீட்டிப்பு செய்யப்பட்டதற்கு மாமன்றத்தின் பின்னேற்புக்கும் மேலும் மேற்படி உயர்ஒப்பந்தப்புள்ளிதாரரால் செலுத்தப்பட்ட தொகையை கழித்து மீதமுள்ள தொகையை செலுத்தவும் மேற்படி உரிம இனத்தை அரசாணை எண்: 78 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 25.05.2009இல் காணும் நிபந்தனைகளின்படி மேலும் 2 வருடங்கள் 8 மாதங்களுக்கு ஒப்படைக்கவும் ரூ.1,62,000 இல் ஒவ்வொரு ஆண்டும் 5 சதவிகித உரிம தொகை உயர்வுடன் வரிகள் உட்பட செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையுடன் ஒப்படைப்பு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்

**அலுவலகக்குறிப்பு :**

திருநெல்வேலி மாநகராட்சி, தச்சநல்லூர் மண்டல அலுவலகத்தில் 17.03.2022 அன்று நடைபெற்ற பொதுஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் தச்சநல்லூர் மண்டலத்திற்குட்பட்ட மதுரை ரோடு, வேன் ஸ்டாண்டில் அங்கு நிறுத்தப்படும் வேன்களுக்கு மாநகராட்சியால் நிர்ணயிக்கப்படும் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு திரு, முத்துகிருஷ்ணன் என்பவரின் குறுமத் தொகையினை விட கூடுதலான உச்ச ஒப்பந்தப்புள்ளி தொகையான ரூ. 162000/- எற்றுக்கொண்டு` அரசாணை எண் : 78 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 25.05.2009ன் படி ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று வருட காலத்திற்கு கால நீட்டிப்பு செய்யப்பட்ட 1.4.2022 முதல் 31.7.2022 வரை அவர் செலுத்திய தொகையை கழித்து மீதி தொகையை செலுத்தும் பட்சத்தில் 1.8.2022 முதல் 31.3.2025 வரை உரிமம் வழங்கிட மாமன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் : அ1/ 3655/2021**

## தீர்மானம் எண்: 52 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

---

**3.** திருநெல்வேலி மாநகராட்சியில் உள்ள தச்சநல்லூர், பாளையங்கோட்டை, மேலப்பாளையம் மற்றும் திருநெல்வேலி ஆகிய நான்கு மண்டலப் பகுதிகளிலும் உள்ள குடியிருப்புகளுக்கு சொத்துவரி விதிக்கப்பட்டதின் அடிப்படையில் குடிநீர் இணைப்பு வேண்டி விண்ணப்பம் செய்யும் விண்ணப்பதாரர்களுக்கு விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு குடிநீர் வைப்புத் தொகை கட்டணம், பாதாள சாக்கடை வைப்புத் தொகை கட்டணம், குடிநீர் இணைப்புக்கான மேற்பார்வை கட்டணம் மற்றும் சாலை சீரமைப்பு கட்டணம் ஆகியவை வசூல் செய்த பின் உரிய பணி ஆணை வழங்கப்பட்டு சம்பந்தப்பட்ட மாநகராட்சி அலுவலர்கள் முன்னிலையில் குடிநீர் இணைப்பு வழங்குவது நடைமுறையில் உள்ளது.

இந்நிலையில் தாமிரபரணி ஆறு திருநெல்வேலி மாநகராட்சிக்கு முக்கிய நீர் ஆதாரமாக இருந்தாலும், தற்போது 15 தலைமை நீரேற்றும் நிலையங்களிலும் தேவையான மோட்டார், பம்ப் ஆகியவை உரிய முறையில் பராமரிக்கப்பட்டு இயக்கப்பட்டாலும், சட்டத்திற்கு புறம்பாக மாநகராட்சி அனுமதியின்றி குடிநீர் இணைப்புகள் எடுக்கப்பட்டதின் விளைவாக பொதுமக்களுக்கு உரிய முறையில் தேவையான குடிநீர் சென்று சேருவதில்லை. இதனால், பொதுமக்களுக்கு தேவையான குடிநீர் விநியோகிக்க இயலாமலும், அதே நேரத்தில் அனுமதியின்றி எடுக்கப்பட்ட குடிநீர் இணைப்புகளால் மாநகராட்சிக்கு வருவாய் இழப்பும் ஏற்பட்டு வருகிறது. அனுமதியின்றி எடுக்கப்பட்ட குடிநீர் இணைப்புகளை வரன்முறை

படுத்துவதன் மூலம் ஈட்டப்படும் வருவாயை வைத்து குடிநீர் மேம்பாட்டு பணிகளுக்கு பயன்படுத்திட ஏதுவாக இருக்கும்.

எனவே, சட்டத்திற்கு புறம்பாக மாநகராட்சி அனுமதியின்றி குடிநீர் இணைப்புகள் எடுக்கப்பட்டுள்ளது கண்டறியப்பட்டுள்ளது. மேலும் மாநகராட்சி வார்டு முழுவதும் அனுமதியின்றி குடிநீர் இணைப்புகள் ஏதும் உள்ளனவா என கணக்கெடுப்பு பணியும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. எனவே, மேற்படி அனுமதியின்றி எடுக்கப்பட்ட குடிநீர் இணைப்புகளை வரன்முறை படுத்துவதற்கு ஏதுவாக சம்பந்தப்பட்ட கட்டிடத்தின் சொத்துவரி விதிப்பினை அடிப்படையாகக் கொண்டு பொதுமக்கள் விண்ணப்பம் செய்து அதன்பின்னர், குடியிருப்பு கட்டிடங்களுக்கு குடிநீர் இணைப்பு பெறுவதற்கு தேவையான குடிநீர் வைப்புத் தொகை கட்டணம ரூ.6500/-, பாதாள சாக்கடை வைப்புத் தொகை கட்டணம் ரூ.5000/-, குடிநீர் இணைப்புக்கான மேற்பார்வை கட்டணம் மற்றும் சாலை சீரமைப்பு கட்டணம் ஆகியவை செலுத்தி அபராத கட்டணமாக ரூ.5000/-மும் செலுத்தி அனுமதியற்ற குடிநீர் இணைப்பினை வரன்முறை படுத்திக் கொள்ள மாமன்ற அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு:**

பொருளில் கண்ட விபரப்படி, சட்டத்திற்கு புறம்பாக மாநகராட்சி அனுமதியின்றி குடிநீர் இணைப்புகள் எடுக்கப்பட்டுள்ளது கண்டறியப்பட்டுள்ளது. மேலும் மாநகராட்சி வார்டு முழுவதும் அனுமதியின்றி குடிநீர் இணைப்புகள் ஏதும் உள்ளனவா என கணக்கெடுப்பு பணியும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. எனவே, மேற்படி அனுமதியின்றி எடுக்கப்பட்ட குடிநீர் இணைப்புகளை வரன்முறை படுத்துவதற்கு ஏதுவாக சம்பந்தப்பட்ட கட்டிடத்தின் சொத்துவரி விதிப்பினை அடிப்படையாகக் கொண்டு பொதுமக்கள் விண்ணப்பம் செய்து அதன்பின்னர், குடியிருப்பு கட்டிடங்களுக்கு குடிநீர் இணைப்பு பெறுவதற்கு தேவையான குடிநீர் வைப்புத் தொகை கட்டணம் ரூ.6500/-, பாதாள சாக்கடை வைப்புத் தொகை கட்டணம் ரூ.5000/-, குடிநீர் இணைப்புக்கான மேற்பார்வை கட்டணம் மற்றும் சாலை சீரமைப்பு கட்டணம் ஆகியவை செலுத்தி அபராத கட்டணமாக ரூ.5000/-மும் செலுத்தி அனுமதியற்ற குடிநீர் இணைப்பினை வரன்முறை படுத்திக் கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

## தீர்மானம் எண்: 53 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

---

**4.** இம்மாநகராட்சியில் ஆணையாளர் அவர்களின் அலுவலக பயன்பாடு மற்றும் கள ஆய்வு மேற்கொள்வதற்கும் மற்றும் தலைமை அலுவலக உயர் அலுவலர்கள் மற்றும் அமைச்சசர் பெருமக்கள் ஆய்வு மேற்கொள்ள வரும் போது அவர்களின் பயன்பாட்டிற்கு வாகனம் ஒதுக்கீடு செய்யும் பொருட்டும், புதிதாக TOYOTA Crysta – GX(7) Super White வாகனம் இரண்டு எண்ணங்கள் கொள்முதல் செய்வதற்காக அங்கீகாரம் பெற்ற M/s.Annamallais Agencies Madurai Private Limited, Tirunelveli வாகன விற்பனையாளரிடம் இருந்து விலைப்புள்ளி பெறப்பட்டுள்ளது.

TOYOTA Crysta – GX(7) Super White வாகனம் ஒன்று கொள்முதல் செய்வதற்கு பெறப்பட்ட விலைப்புள்ளியில் விபரம் பின்வருமாறு:-

| | RATE |
|---|---|
| Ex-showroom Price | :Rs. 19,67,000/- |
| Income Tax @ 1% from Ex-showroom price | :Rs. 19,670/- |
| Life Tax & Registration Charges | :Rs. 3,07,750/- |
| Toyota Protect (Insurance) | :Rs. 95,833/- |
| Accessories | :Rs. 80,000/- |
| Extended Warranty | :Rs. 27,621/- |
| Smiles | :Rs. 13,243/- |
| Fast Tag | :Rs. 700/- |
| Total | :Rs.25,11,817/- |

மேற்கண்டவாறு அங்கீகரிக்கப்பட்ட வாகன விற்பனையாளர் M/s.Annamallais Agencies Madurai Private Limited, Tirunelveli மூலம் TOYOTA Crysta – GX(7) Super White வாகனம் இரண்டு எண்ணங்கள் கொள்முதல் செய்வதற்கு ஆகும் மதிப்பீடு தொகை ரூ.50,23,634/--க்கு (Rs.25,11,817/- x 2 Nos) நிர்வாக அனுமதிக்காகவும், மேற்படி செலவினத் தொகையினை மாநகராட்சி பொது நிதியில் (General Fund) இருந்து மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு:**

இம்மாநகராட்சியில் ஆணையாளர் அவர்களின் அலுவலக பயன்பாடு மற்றும் கள ஆய்வு மேற்கொள்வதற்கும் மற்றும் தலைமை அலுவலக உயர் அலுவலர்கள் ஆய்வு மேற்கொள்ள வரும் போது அவர்களின் பயன்பாட்டிற்கு வாகனம் ஒதுக்கீடு செய்யும் பொருட்டும், புதிதாக TOYOTA Crysta – GX(7) Super White வாகனம் இரண்டு எண்ணங்கள் கொள்முதல் செய்வதற்கு ஆகும் மதிப்பீடு தொகை ரூ.50,23,634/-க்கு (Rs.25,11,817/- x 2 Nos) நிர்வாக அனுமதிக்காகவும், மேற்படி செலவினத் தொகையினை மாநகராட்சி பொது நிதியில் (General Fund) இருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.இ3/2630/2022)**

**தீர்மானம் எண்: 54 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

---

**5.** இம்மாநகராட்சியில், பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகத்திற்கான திருத்தியமைக்கப்பட்ட துணை விதிகளின்படி, தமிழ்நாடு அரசிதழில் 23.06.2010 அன்று பிரசுரம் செய்யப்பட்டுள்ளதின்படி கீழ்க்கண்டவாறு குடிநீர் இணைப்புக்கான வைப்புத் தொகை மற்றும் குடிநீர் கட்டணங்கள் வசூலிக்கப்பட்டு வருகின்றது. அதன் விபரம் பின்வருமாறு:-

1. வைப்புத் தொகை விபரம் : குடியிருப்பு கட்டிடங்களுக்கு : ரூ.6500/-

: குடியிருப்பு அல்லாத வணிக கட்டிடங்களுக்கு : ரூ.12500/-

2. குடிநீர் கட்டண விபரம் :

- குடியிருப்பு கட்டிடங்களுக்கு :ரூ.100/- மாதம் ஒன்றுக்கு (Flat rate) (10000 லிட்டர் வரை) மற்றும் 10000 லிட்டருக்கு மேல் ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் ரூ.10/- வீதம் குடிநீர் கட்டணம் (Meter rate) நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

- குடியிருப்பு அல்லாத கட்டிடங்களுக்கு: மாதம் ஒன்றுக்கு ரூ.200/- (குறைந்த பட்ச கட்டணம்) மற்றும் 10000 லிட்டருக்கு மேல் ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் ரூ.20/- வீதம் குடிநீர் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்டவாறு குடிநீர் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டு, அதன்படி தற்போது வசூலிக்கப்பட்டு வருகின்றது. மேற்கண்ட கட்டணங்கள் நிர்ணயம் செய்யப்பட்டு சுமார் 12 ஆண்டுகள் ஆகிவிட்ட நிலையிலும் தற்போது மாநகராட்சியின் நிதி ஆதாரத்தினை பெருக்கும் விதமாகவும் குடியிருப்பு அல்லாத கட்டிடங்கள் மற்றும் வணிக பயன்பாட்டில் உள்ள கட்டிடங்களுக்கு AMR மீட்டர் பொருத்தி கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்திடலாம்.

1. வைப்புத் தொகை : குடியிருப்பு அல்லாத வணிக கட்டிடங்களுக்கு ரூ.50,000/-

2. குடிநீர் கட்டண விபரம் : குடியிருப்பு அல்லாத கட்டிடங்கள் மற்றும் வணிக பயன்பாட்டில் உள்ள கட்டிடங்களுக்கு AMR மீட்டர் பொருத்தி 1000 லிட்டருக்கு ரூ.30/- வீதம் நிர்ணயம் செய்திடவும்

மேற்படி பொருள் தொடர்பாக நகராட்சி நிர்வாக இயக்குநரக அலுவலகத்தில் அனுமதி பெற்று, தமிழ்நாடு அரசிதழில் பிரசுரம் செய்து குடிநீர் கட்டணம் வசூல் செய்திடவும் மாமன்ற அனுமதிக்கும் முடிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு:**

பொருளில் கண்ட விபரப்படி, இம்மாநகராட்சியில் குடிநீர் கட்டணங்கள் நிர்ணயம் செய்யப்பட்டு சுமார் 12 ஆண்டுகள் ஆகிவிட்ட நிலையிலும் தற்போது மாநகராட்சியின் நிதி ஆதாரத்தினை உயர்த்தும் விதமாக வணிக பயன்பாடு மற்றும் குடியிருப்பு அல்லாத கட்டிடங்களுக்கு AMR மீட்டர் பொருத்தி 1000 லிட்டருக்கு ரூ.30/- வீதம் நிர்ணயம் செய்திடவும் மேற்படி பொருள் தொடர்பாக நகராட்சி நிர்வாக இயக்குநரக அலுவலகத்தில் ஒப்புதல் பெற்று தமிழ்நாடு அரசிதழில் பிரசுரம் செய்து அதன்படி குடிநீர் கட்டணம் வசூல் செய்திடவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.இ3/3482/2022)**

## தீர்மானம் எண்: 55 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

---

**6.** திருநெல்வேலி மாநகராட்சியின் மொத்த பரப்பளவு 108.65 சதுர கி.மீட்டர் ஆகும். இம்மாநகராட்சியில் தச்சநல்லூர், பாளையங்கோட்டை, மேலப்பாளையம் மற்றும் திருநெல்வேலி

ஆகிய நான்கு மண்டலங்களாக பிரிக்கப்பட்டுள்ளதில், மொத்தம் உள்ள 55 வார்டுகளில் 2011ம் வருடத்திய மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 4,74,838 ஆகும். தற்போதைய மக்கள் தொகை 5,22,322 ஆக உள்ளது.

இம்மாநகராட்சியில் தாமிரபரணி ஆற்றுப்படுகையான கொண்டாநகரம், சுத்தமல்லி, குறுக்குத்துறை, மணப்படைவீடு, திருமலைக்கொழுந்துபுரம், தீப்பாச்சியம்மன் கோவில், கருப்பந்துறை, தருவை ஆகிய இடங்களில் உள்ள மொத்தம் 15 தலைமை நீரேற்றும் நிலையங்களில் உள்ள 46 நீர் உறிஞ்சு கிணறுகளில் இருந்து 48 மில்லியன் லிட்டர் குடிநீர் பெறப்பட்டு அதனை 72 மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளில் நீரேற்றம் செய்யப்பட்டு அதில் 0இருந்து மாநகரப் பகுதியில் உள்ள 55 வார்டு பகுதிகளுக்கு சராசரி 92 லிட்டர் தனிநபர் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது.

மேலும், இம்மாநகராட்சியில் மிகவும் அத்தியாவசியமான பணியான குடிநீர் பணியினை மேற்கொள்வதற்கு போதுமான பணியாளர்கள் இல்லை. மேலும், மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பகுதியில் அடிப்படை சேவை பணிகள் செய்தல் அவசியமான ஒன்றாக இருப்பதால், மேற்படி சேவை பணிகளை திறம்பட செய்திட வேண்டிய பணியாளர்கள் போதுமானதாக இல்லாத நிலையில் வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை பணியமர்த்தப்பட்டு சேவைகளை செயல்படுத்தலாம் என நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.21787/2021/EA-2 நாள் 2.10.2021ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டபடி, குடிநீர் வழங்கல் மற்றும் அதன் தொடர்புடைய கட்டமைப்புகளை இயக்கி பராமரிப்பு பணிகளை 15 தலைமை நீரேற்றும் நிலையங்களில் உள்ள மின்மோட்டார்கள் மற்றும் பம்புகளையும், பம்பிங் குழாய்களில் ஏற்படும் கசிவு மற்றும் பழுதுகளை சரிபார்த்து குடிநீர் விநியோகம் சம்பந்தமான இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதற்கு ஒரு வருட காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.3.97 கோடிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களிடம் நிர்வாக அனுமதி பெறவும் மற்றும் தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநரக அலுவலகத்தில் உரிய தொழில் நுட்ப அனுமதி பெறவும் மாமன்ற அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு:**

பொருளில் கண்ட விபரப்படி, இம்மாநகராட்சி பகுதிக்கு தாமிரபரணி ஆற்றுப்படுகையான கொண்டாநகரம், சுத்தமல்லி, குறுக்குத்துறை, மணப்படைவீடு, திருமலைக்கொழுந்துபுரம், தீப்பாச்சியம்மன் கோவில், கருப்பந்துறை, தருவை ஆகிய இடங்களில் உள்ள மொத்தம் 15 தலைமை நீரேற்றும் நிலையங்களில் உள்ள 46 நீர் உறிஞ்சு கிணறுகளில் இருந்து 47.50 மில்லியன் லிட்டர் குடிநீர் பெறப்பட்டு அதனை 72 மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளில் நீரேற்றம் செய்யப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. மேற்படி குடிநீர் விநியோகம் சம்பந்தமாக இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதற்கு போதுமான பணியாளர்கள் மாநகராட்சியில் இல்லாததால் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளை ஒப்பந்தக்காரர் மூலம் செய்வதற்கும், ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதற்கும் ஒரு வருட காலத்திற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.3.97 கோடிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநரிடம் உரிய நிர்வாக அனுமதி பெறவும், தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக

இயக்குநரக அலுவலகத்தில் உரிய தொழில் நுட்ப அனுமதி பெற்று மேல் நடவடிக்கை தொடரவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**(மதிப்பீடு எண். 17/2022-23)**

## தீர்மானம் எண்: 56 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

---

**7.** திருநெல்வேலி மாநகராட்சியில் விடுபட்ட பகுதிகளில், பாதாள சாக்கடை திட்டத்தினை நிறைவேற்ற, அம்ரூத் திட்டத்தின் கீழ் ஆசிய வங்கி நிதியுதவியுடன் 2வது கட்டமாக ரூ.296.11 கோடி மதிப்பீட்டிலும் (மாநகராட்சி பழைய வார்டு எண்.1 முதல் 7 வரை, வார்டு எண்.38 (பகுதி) மற்றும் வார்டு எண்.39 முதல் 55 வரை) பாதாள சாக்கடை திட்டம் நிறைவேற்ற வேலை ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றது. மேற்படி திட்டப்பணியில் (1)பேட்டை - பழையபேட்டை இணைப்புச்சாலை ஆடு அறுக்கும் மனை அருகிலும் மற்றும் (2) நயினார்குளம் பகுதியிலும் கழிவுநீரேற்றும் நிலையங்கள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இம்மாநகராட்சியில், தேசிய நதிநீர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 2007-ம் ஆண்டில் மாநகராட்சிப் பகுதியில் 10 வார்டுகளில் முழுமையாகவும், 12 வார்டுகளில் பகுதியாகவும் பாதாள சாக்கடைத் திட்டம் ரூ.52.00 கோடி மதிப்பீட்டில் செய்து முடிக்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தின் கீழ் நயினார்குளம் பகுதியில் கழிவுநீரேற்றும் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

தற்போது, அம்ரூத் திட்டத்தின் கீழ் மேற்படி நயினார்குளம் பகுதியில் புதியதாக கழிவுநீரேற்றும் நிலையம் அமைக்கப்பட வேண்டியிருப்பதால், அவ்விடத்தில் ஏற்கனவே உள்ள பழைய கழிவுநீரேற்றும் நிலையத்தில் உள்ள கிணறுகள், பம்பு ரூம் மற்றும் மின் அறை ஆகியவற்றை இடித்து அப்புறப்படுத்துவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

மேலும், பாதாள சாக்கடை திட்டம் பகுதி -2ன் கீழ் மேற்படி நயினார்குளம் பழைய கழிவுநீரேற்றும் நிலையத்தினை இடித்து அப்புறப்படுத்தும் பணிகளை மேற்கொள்வதற்கு திட்ட மதிப்பீட்டில் வழி வகை செய்யப்படவில்லை. மேலும், மேற்படி பணியினை அவசியமாக மேற்கொள்ளப்பட வேண்டியிருப்பதால், அவ்விடத்தில் ஏற்கனவே உள்ள பழைய கழிவு நீரேற்றும் நிலையத்தினை இடித்து அப்புறப்படுத்தும் பணிகளை மேற்கொள்வதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.43,38,805/-க்கு நிர்வாக அனுமதி வழங்கிடவும் மாமன்ற அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு:**

பொருளில் கண்ட விபரப்படி, அம்ரூத் திட்டத்தின் கீழ் ஆசிய வங்கி நிதியுதவியுடன் பாதாள சாக்கடை திட்டத்தினை நிறைவேற்றும் பொருட்டு 2வது கட்டமாக ரூ.296.11 கோடி மதிப்பீட்டிலும் (மாநகராட்சி பழைய வார்டு எண்.1 முதல் 7 வரை, வார்டு எண்.38 (பகுதி) மற்றும் வார்டு எண்.39 முதல் 55 வரை) பாதாள சாக்கடை திட்டத்தினை நிறைவேற்ற பணிகள் நடைபெற்று கொண்டு வரும் நிலையில், திட்ட மதிப்பீட்டில் வழி வகை செய்யப்பட்டுள்ளதின்படி, நயினார்குளம் பகுதியில் கழிவுநீரேற்றும் நிலையம் அமைக்கப்பட வேண்டியிருப்பதால், ஏற்கனவே தேசிய நதிநீர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ்

2007-ம் ஆண்டில் நயினார்குளம் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள பழைய கழிவுநீரேற்றும் நிலையத்தில் உள்ள கிணறுகள், பம்பு ரூம் மற்றும் மின்அறை ஆகியவற்றை இடித்து அப்புறப்படுத்திடவும், அதற்காகும் மதிப்பீடு தொகை ரூ.43,38,805/-ம் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

(2) மேலும், மேற்படி பணிக்காகும் செலவினத் தொகை ரூ.43,38,805/- ஐ பாதாளசாக்கடை திட்டம் Phase–II நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.இ3/2322/2022)**

## தீர்மானம் எண்: 57 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

---

**8.** திருநெல்வேலி மாநகராட்சி திருநெல்வேலி மண்டல அலுவலகத்திற்குட்பட்ட பேட்டை- பழைய பேட்டை இணைப்புச் சாலையில் அமைந்துள்ள ஆடறுப்பு மனையில் நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு அரசாணை எண் 78 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 25-05-2009- ன்படி ஒவ்வொரு ஆண்டிற்கும் முந்தைய ஆண்டின் உரிமத் தொகையில் 5% உயர்வுடன் ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டு காலத்திற்கு அனுபவிக்கும் வகைக்கு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி 06-07-2022 அன்று நிர்ணயிக்கப்பட்டது. செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி மூலமாக 23-06-2022 அன்று தினகரன் மற்றும் மாலை மலர் நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டது. மேற்படி உரிம இனத்திற்கு
06-07-2022 அன்று நடைபெற்ற பொது ஏலம் /ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்கள் விபரம் கீழ்கண்ட விபரப்படி உள்ளது.

**இனம் எண் : 7**

திருநெல்வேலி மண்டல அலுவலகத்திற்குட்பட்ட பேட்டை - பழைய பேட்டை இணைப்புச்சாலையில் அமைந்துள்ள ஆடறுப்பு மனையில் நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.
(நிர்ணயம் செய்யப்பட்ட குறுமத்தொகை ரூ. 5,80,000 /-)

**ஏலத்தில் கலந்து கொண்டவர் விபரம்**

| **வ.எண்** | **பெயர் மற்றும் முகவரி** | **வைப்புத் தொகை செலுத்திய விபரம்** | **சூல்வன்சி மற்றும் கூடுதல் வைப்புத்தொகை செலுத்தப்பட்ட விபரம்** | **ஏல உச்ச கேள்வி தொகை** |
|---|---|---|---|---|
| 1. | திருமதி. எஸ்.பி. சாந்தி<br>க/பெ. எஸ்.பி. பாண்டியன்(லேட்)<br>5/9- பெருமாள் வடக்கு ரதவீதீ<br>திருநெல்வேலி ஜங்ஷன். | Rs. 1,28,000 /<br>City union Bank<br>D.D.No. 321261<br>Dated:<br>02-07-2022 | சால்வன்சி மதிப்பு<br>ரூ. 40,00,000<br>Certificate No.<br>TN- 1720220622106<br>Dt. 28-06-2022 | ரூ.<br>5,84,000/- |

**ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர் விபரம்**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | திரு. எஸ்.பி. மகாராஜா<br>த/பெ. எஸ்.பி. பாண்டியன்<br>30- அம்மன் கோவில் தெரு,<br>மேலப்பாளையம்<br>திருநெல்வேலி-2 | Rs. 1,28,000 /<br>City union Bank<br>D.D.No. 321259<br>Dated:<br>02-07-2022 | சால்வன்சி மதிப்பு ரூ.<br>40,00,000<br>Certificate No.<br>TN- 1720220502147<br>Dt. 12-05-2022 | ரூ. 5,85,100 /- |

திருநெல்வேலி மண்டல அலுவலகத்தற்குட்பட்ட பேட்டை பழைய பேட்டை இணைப்புச்சாலையில் அமைந்துள்ள ஆடறுப்பு மனையில் நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு நிர்ணயம் செய்யப்பட்ட குறுமத்தொகை . 5,80,000/-ஆகும். இவ்வினத்திற்கு பொது ஏலத்தில் கலந்து கொண்ட திருமதி. எஸ்.பி. சாந்தி என்பவரின் உச்ச கேள்வி ரூ. 5,84,000/- ஆகும். ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்ட திரு. எஸ்.பி. மகாராஜா என்பவரின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. 5,85.100/ - ஆகும். .இந்த உச்ச கேள்வியானது நிர்ணயிக்கப்பட்ட குறும தொகையினை விட 5,100/- கூடுதலாகவும் , கடந்த ஆண்டு ஏலத் தொகையினை விட ரூ. 32,747/- கூடுதலாகவும் (5,52,353 - 5,85,100 ) திருமதி. எஸ்.பி. சாந்தி என்பவரின் ஏலக்கேள்வி தொகையை விட ரூ. 1,100 /- கூடுதலாகவும் கடந்த மூன்று ஆண்டு சராசரி தொகையை விட ரூ. 58,632 /- கூடுதலாகவும் உள்ளது. எனவே உச்ச ஒப்பந்த புள்ளி தொகை ரூ. 5,85,100/- ஐ ஏற்று , திரு. எஸ்.பி. மகாராஜா என்பவருக்கு திருநெல்வேலி மண்டல அலுவலகத்தற்குட்பட்ட பேட்டை பழைய பேட்டை இணைப்புச்சாலையில் அமைந்துள்ள ஆடறுப்பு மனையில் நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் வசூல் செய்யும் உரிமத்தை ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டு காலத்திற்கு அனுபவிக்கும் உரிமத்தினை வழங்க மாமன்றத்தின் பார்வைக்கும் , முடிவிற்கும்.

**அலுவலகக்குறிப்பு:**

**1.** மேலே பொருளில் காணும் விபரப்படி இனம் எண் 7 திருநெல்வேலி பேட்டை - பழைய பேட்டை இணைப்பு சாலையில் அமைந்துள்ள ஆடறுப்பு மனையில் நிர்ணயம் செய்யப்பட்ட கட்டணம் வசூல் செய்யும் உரிமத்தை திரு. எஸ்.பி. மகாராஜா என்பவரின் உச்ச ஒப்பந்தபுள்ளி தொகை ரூ. 5,85,100/- ஏற்று ஒவ்வொரு ஆண்டிற்கும் முந்தைய ஆண்டின் உரிமத் தொகையில் **5%** உயர்வுடன் அன்னாருக்கு மேற்படி உரிமத்தை ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டு காலத்திற்கு அனுபவிக்கும் உரிமத்தினை வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்: அ1/405/2022 (திலி வார்டு)**

## தீர்மானம் எண்: 58

**1. 29.07.2022 அன்றுமாண்புமிகு மேயர் அவர்களிடம் இப்பொருள் குறித்து ஏலம் /ஒப்பந்தப்புள்ளியில் ஒரே குடும்பத்தை சேர்ந்த நபர்கள் கலந்து கொண்டுள்ளதால் மேற்படி பொருளை இரத்து செய்ய அளித்த கோரிக்கை மற்றும் மாமன்றக் கூட்டத்தில் பெரும்பான்மையான மாமன்ற உறுப்பினர்கள் இதே கோரிக்கையை வலியுறுத்தியதின் காரணமாக இத்தீர்மானம் இரத்து செய்ய தீர்மானிக்கப்பட்டது.**

**2. திருநெல்வேலி வார்டு, மண்டலத் தலைவர் திருமதி.செ.மகேஷ்வரி அவர்களின் ஆட்சேபனை கடிதத்தின்படி பொருள் எண்-8ஐ ரத்து செய்ய மாமன்றம் தீர்மானிக்கப்பட்டது.**

---

**9.** திருநெல்வேலி மாநகராட்சி தச்சநல்லூர் மண்டலம் வார்டு எண.10ல் பரணி நகர் தெருவில் புதியதாக தெரு விளக்கு அமைத்திட கேட்டு வணக்கம் நெல்லை என்ற பதிவுக்கு மேற்படி பகுதி பொது மக்கள் கோரியுள்ளனர். மேற்படி கோரிக்கையின்படி மேற்படி பகுதியில் ஏற்கனவே அமைந்துள்ள 14 மின் கம்பங்களில் தெரு விளக்கு லைன் அமைத்திடவும் 20W LED மின் விளக்குகள் பொருத்தவும் ஏற்படும் செலவினம் ரூ.1.30,800/-க்கு (ஒரு லட்சத்து முப்பதாயிரத்து எண்ணூறு மட்டும்) நிர்வாக அனுமதி வேண்டி மாமன்ற அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு:**

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை — 28 அலுவலக (Directorate of Municipal Administration Chennai -28 Circular Roc.No.45490/2012/DO1 Dated 11.05.2022) சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட விலை மதிப்பீட்டின்படி திருநெல்வேலி மாநகராட்சி, தச்சநல்லூர் மண்டலம் வார்டு எண்-10ல் பரணி நகர் வ.உ.சி தெரு பகுதி பொது மக்களின் கோரிக்கையின் அடிப்படையிலும் பொது மக்களின் நலன் கருதி வ.உ.சி நகரில் ஏற்கனவே உள்ள 14 மின் கம்பங்களில் தெரு விளக்கு லைன் அமைத்திடவும் மற்றும் 20W LED மின் விளக்கு புதியதாக அமைத்திடவும், அதற்கான செலவினம் ரூ.1.30,800/- (ஒரு லட்சத்து முப்பதாயிரத்து எண்ணூறு மட்டும்) வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்:இ1-042-2022**

**தீர்மானம் எண்: 59 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

---